அரசாங்கத்துக்குச் சொந்தமான வாரியங்களில்—பல்லவன் போக்குவரத்துக் கழகம் இப்படிப்பட்டவைகளில் எல்லாம் அவர்களுக்கு முதலிடம் அளித்து அவர்களை பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே மருத்துவ மனைகளிலே பணி கொடுக்கப்பட்டு அவர்கள் பணி செய்து வருகிறார்கள். அதுபோலவே இப்பொழுது அவர்களை கிராம சேவிக்குகளாக நியமிக்கலாமென்ற அடிப்படையில், "உங்களுக்கு கிராம சேவிக்குகளாகப் பணியாற்றுவதற்கு விருப்பமாயிருக்கிறதா" என்று கேட்டு, பலருக்குத் தகவல் அனுப்பப் பட்டது. சிலர் விருப்பமில்லை என்று தெரிவித்த காரணத்தாலே, விடுவிக் கப்பட்டு விட்டார்கள். விருப்பமுள்ள சிலருக்கு அங்கே பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் மற்ற எல்லா அரசாங்க வாரியங்களிலும் அவர்களுக்கு முதல் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், அவர்களுக்கு வயது வரம்பிலே கூட சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. 30 வயதுக்குள் வயது இருக்க வேண்டுமென்று வரம்பிருந்தால், இளைஞரணியிலே பணியாற்றியிருந்தால், இரண்டு ஆண்டு காலம் சேர்த்து 32 ஆண்டு வரையிலே அந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. சர்வீஸ் கமிஷனில் கூட அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே இன்றைக்கு "எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச்"களில், வேலை தேடித்தரும் நிறுவனங்களில் கூட இவர்கள் இன்னின்ன பணியாற்றுகிறார்கள், இவர்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று உத்தரவு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு எழுதிக் கொடுத்தால், அவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று அறிவிப்பு வழங்கியமைக்காக இந்த அவையிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

Accident during the Car Festival in Srivilliputhur.

*240 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of persons who lost their lives in the accident during the Car Festival in Srivilliputhur, Ramanathapuram District ; and

(*b*) whether the Government have granted any financial aid to the families of the deceased ?

திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற தேரோட்டத்தில் விபத்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற தேரோட்டத்தின் போது எத்தனை பேர் விபத்தில் இறந்தனர் ?

(இ) அவர்களது குடும்பத்திற்கு அரசாங்கம் ஏதும் பண உதவி செய்ததா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) நான்கு.

(இ) அரசு நிதியிலிருந்து தொகை எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால் திருக்கோயில் நிதியிலிருந்து ஈட்டுத் தொகையாக ஒருவரின் குடும்பத்திற்கு ரூபாய் 5,000-மும் மற்ற இருவரின் குடும்பத்திற்கு தலா ரூ. 2,500-மும் அளிக்கப்பட்டுள்ளது. இறந்துபோன நான்காவது நபருக்கு வாரிசுகள் இல்லாததால் ஈட்டுத்தொகை எதுவும் கொடுக்கப் படவில்லை.

திரு. டி. சந்தோஷம் : இந்த விபத்து நடந்ததற்குக் காரணம் யாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சுமார் ஐயாயிரம் பேர் இழுக்கக்கூடிய தேரை 25 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் ஒரே நேரத் திலே வேகமாக இழுத்த காரணத்தாலும், தார் ரோடாக இருந்த காரணத்தாலும் அளவுக்கு மீறிய வேகத்தோடு தேர் ஓடிற்று. அங்கேயிருந்த போலீஸ் அதிகாரிகளும், இந்தத் துறையினுடைய அதிகாரிகளும் எவ்வளவோ சொல்லியும் கூட, அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தேர் மிக உயரமாக இருந்த காரணத்தால், தடுப்புக் கட்டைகளைத் தாண்டி ஓடிவிட்டது. அதற்குப் பிறகு தான் உயரமான இடத்திலே முறிவு ஏற்பட்டு, கலசத்தோடு கீழே விழுந்து இந்த விபத்து ஏற்பட்டது. மேற் கூறப்பட்டவைகள்தான் விபத்து ஏற்பட்டதற்குக் காரணங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தேர்கள் ஓரளவு வேகத்தோடு மேலாக ஓடக்கூடாது என்பதாக ஏதாவது நிர்ணயம் செய்ய அரசு உத்தேசித் துள்ளதா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வேகக் கட்டுப்பாடு என்பதை விட குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, தேர் ஓடும் போது, அதனுடைய வேகத்தைக் கட்டுப்படுத்த இரண்டு பக்கமும் தடுப்புக் கட்டைகள் இருக்கின்றன. பெரிய கட்டைகளைப் போட்டு அதனுடைய வேகத்தைக் குறைப்பதற்கு பலவிதமான வழிகள் இருக்கின்றன. அந்த வழி முறைகள் எல்லாம் பயன்படுத்தப்பட்டனவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அவைகள் அத்தனையும் பயன் படுத்தப்பட்டன. ஆனால் 5 ஆயிரம் பேர் இழுக்க வேண்டிய தேரை 25 ஆயிரம் பேர் சேர்ந்து வேகமாக இழுத்த காரணத்தால்தான், அந்தத் தடுப்புக் கட்டைகளையும் தாண்டி தேர் ஓடிச் சென்று அந்த விபத்து ஏற்பட்டு விட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : திருவில்லிபுத்தூரிலுள்ள தேர் நீண்ட காலமாக இழுக்கப்படாத ஒன்று. அந்தத் தேர் இழுக்கப்பட வேண்டு மென்று முடிவெடுத்தபோது, சரியாக பழுது பார்க்கப்படாமலேயே இழுத் ததாக ஒரு குறையை அந்தப் பகுதி மக்களும், நேரில் பார்த்தவர்களும் சொல்கிறார்கள். அதனால்தான் இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்ட தாகவும், அதைத் தொடர்ந்து பல்வேறு சம்பவங்கள் ஏற்பட்டதாகவும் அரசுக்குத் தெரிவித்தார்களா ? இனிமேல் தேர் இழுக்கப்படும் முன்பாக அந்தத் தேர் சரியாக பழுது பார்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து, அதற்குப் பின்புதான் அனுமதி அளிக்க வேண்டுமென்று அரசு உத்தர விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : எந்தத் தேரை ஓட்டுவதாக இருந்தாலும் பொதுப்பணித்துறை எஞ்சினியருடைய சர்டிபிகேட் வாங்கப் பட்டு, அதற்குப் பின்னால்தான் ஓட்டப்படுகிறது. இந்தத் தேரைப் பொறுத்த வரையில், கடந்த 18 ஆண்டுக் காலமாக ஓட்டப்படவில்லை. இந்தத் தடவை ஓட்டும்போது, அங்கேயிருக்கின்ற நிர்வாகப் பொறியாளர், பப்ளிக் ஒர்க்ஸ், அதிகாரிகளிடத்திலிருந்து தேவையான அனுமதிகள் வாங்கப்பட்டு அதற்குப் பிறகுதான் ஓட்டப்பட்டதே தவிர, இதில் வேறு எந்தவிதமான தவறும் நடைபெற்றுவிடவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாரூர் தேர் 20 வருஷமாக ஓடவில்லையே. அப்புறம் ஓடியபிறகு அதற்கு ஒன்றும் விபத்து வரவில்லையே. (சிரிப்பு).

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள் வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு, பேரவையால் நிறைவேற்றப் பட்டு இது அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன் முடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக் காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.